DINAMALAR 28 SEP 2008

# தியான லிங்கம் குரு தந்த லிங்கம்

நூலாசிரியர்: ப்ரியன் ஸ்ரீனிவாசன். வெளியீடு: ஈஷா அறக்கட்டளை, 15, கோவிந்தசாமி நாயுடு லேஅவுட், சிங்காநல்லூர், கோயம்புத்தூர் -641 005. (பக்கம்: 176. விலை: குறிப்பிடப்படவில்லை)




மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியான வெள்ளியங்கிரி மலைச்சாரலில் அமைந்துள்ள ஈஷா யோக மையத்தில் யோக அறிவியலின் சாரமாக பிராணப் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள தியான லிங்கம் தனிச் சிறப்பு வாய்ந்தது. தியான லிங்கத்தை நிர்மாணித்து பிரணாப் பிரதிஷ்டை செய்வது என்பது சாமானிய சாதனை இல்லை. கடந்த 2000 ஆண்டுகளில் பலர் முயற்சித்தும் நிறைவேறாத இந்த முயற்சி சத்குரு ஜதி ஸ்ரீ வாசுதேவின் முயற்சியால் நிறைவேறிய ஒன்று.

இப்படி ஒரு தியான லிங்கத்தை பிரதிஷ்டை செய்ய அவர் மூன்று பிறவிகளாக முயற்சி எடுத்திருக்கிறார்! அந்த வரலாறே இந்த நூலில் பிரமிக்கத்தக்க விதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது! அத்துடன் தியான லிங்கம் என்பது என்ன, அது ஒருவரின் ஆன்மா எப்படி வழி காட்டுகிறது. அதில் குருவின் பங்கு என்ன என்பதெல்லாம் மிக விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது. இந்த நூல் பிறவித்தளையிலிருந்து விடுபட விழையும் அன்பர்களுக்கு ஒரு மகத்தான வழிகாட்டி.

- குண்டலகேசி.